<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>அசல் வழக்கு எண். 53 /2019</u>

PW3 – திரு. முருகேசன் நாள். 30.03.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. 1ம் வாதி பாப்பாத்தி எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் எனது பெரியப்பா மகள் ஆவார். நான் நீதிமன்றத்திற்கு அழைப்பாணையில் பெயரில் வரவில்லை என்றும் 1ம் வாதி கூறியதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் 1ம் வாதி கூறியது என்றால் சரியல்ல. 1ம் வாதி, 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தந்தை வேலு என்பவருக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 5 ஏக்கர் வேலுக்கு பாத்தியப்பட்டது அதன் பட்டா நம்பர் எனக்கு தெரியாது.

3. மேற்படி வேலுக்கு பாத்தியப்பட்ட 5 ஏக்கர் நிலத்தில் பெயர்கள் மற்றும் விஸ்தீரணங்கள் எனக்கு தெரியுமா என்றால் நிலத்தின் பெயர் மழனி, பொம்பளை செய்யி, தேவமாக்காள், சுந்தர செய்யி நார்த்தங்கால், நார் நாக்கல், மேலும் மேலே கூறிய சுந்தர செய்யி நார்த்தங்கால் நிலமானது 1 முந்திரி,

நார் நாக்கல் 3 முந்திரி, பொம்பளை செய்யி 1 முந்திரி, தேவ மாக்காள் 1 1/2 முந்திரி மற்ற வயல்களின் பெயர் ஞாபகம் இல்லை.

4. மேற்கூறிய வேலு என்பவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தை வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்து தனித்தனியே பயிர் இன்சூரன்ஸ் கட்டி வருகிறார்கள் என்றால் சரியல்ல பாகப்பிரிவினை ஏற்படவில்லை மேலும் பயிர் இன்சூரன்ஸ் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பெயரில் அனைத்து பாகஸ்தர்களும் கட்டி இன்சூரன்ஸ் தொகையை பிரித்து எடுத்துக் கொள்கிறார்கள்.

5. வாதி, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை அடிப்படையில் தனித்தனியே அவர் அவர் நிலத்திற்கு இன்சூரன்ஸ் கட்டி வருகிறார்கள் என்றும் வழக்கிற்காக கூட்டாக கட்டி வருகிறார்கள் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அவர்களின் ஒதுக்கப்பட்ட பூர்விக இடத்தில் தனித்தனியே வீடு கட்டி இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல பாகம் பிரிக்கப்படவில்லை ஆனால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தனித்தனியே வீடு கட்டி கொண்டு இருக்கிறார்கள். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 15 வருடங்களுக்கு முன்னரே தனித்தனியே வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றும் வழக்கிற்காக தற்போது தான் கட்டி கொண்டு இருக்கிறார்கள் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. வேலு உயிருடன் இருக்கும் காலத்திலேயே 1ம் வாதிக்கு சீர் வரிசைகளுடன் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல பாப்பாத்தி அவரே திருமணம் செய்து கொண்டார். 1ம் வாதிக்கு அவரின் திருமணத்தின் போதே அவருக்குரிய பாகத்தை வேலு பிரித்து கொடுத்துவிட்டார் என்றும் வழக்கிற்காக பாகம் கொடுக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/ திரு.தெ.மனிஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை